## 92. கல்வாரி காட்சி என்

### பல்லவி

கல்வாரி காட்சி என் கண்முன்னே
என் பாவத்தை நினைத்து மனந்திரும்பினேன்

### சரணங்கள்

1. என் சிந்தனையில் செய்த பாவத்திற்காய்
   உம் சிரசினில் முள்முடி ஏற்றுகொண்டீர்
   சிரசில் வடிந்த இரத்தத்தால்
   என் சிந்தையின் பாவத்தை கழுவினீரே
   - கல்வாரி

2. என் கண்களினால் செய்த பாவத்திற்காய்
   உம் கன்னத்தில் அறைகளை ஏற்றுகொண்டீர்
   கன்னத்தில் வடிந்த இரத்தத்தால்
   என் கண்களின் பாவத்தை கழுவினீரே
   - கல்வாரி

3. என் கைகளினால் செய்த பாவத்திற்காய்
   உம் கைகளில் ஆணிகள் ஏற்றுகொண்டீர்
   கைகளில் வடிந்த இரத்தத்தால்
   என் கைகளின் பாவத்தை கழுவினீரே
   - கல்வாரி

4. என் உணர்ச்சியில் செய்த பாவத்திற்காய்
   உம் உடலில் சவுக்கடி ஏற்றுகொண்டீர்
   உடலில் வடிந்த இரத்தத்தால்
   என் உணர்ச்சியின் பாவத்தை கழுவினீரே
   - கல்வாரி